when the Constitution came into force, were linguistic States. There were large parts of the States where people were speaking other languages. Therefore, the question of official language did not arise at all. So, the fundamental fact is that after the reorganisation of States, all States have adopted the regional language as the State language. Tamil was adopted in Madras. Andhra adopted Telugu and all the Hindi States have adopted Hindi as their official language. As it has happened, a regional language has been pitchforked into the position of the country's official language. That amounts to undue predominance for Hindi. There is no doubt about it. That is the thing we must avoid in the present circumstances. Now, what is the official language of the Union? As at present, even now, English is the associate language. In the Constitution, the official language was said to be Hindi. But English is also an associate language. If Hindi is not to be given a predominant position as the official language of the Union, then the only other language which will take the place of Hindi is English. There is no other language now, which can take its place. I am talking of the present. I am not talking of fifteen years hence. Therefore, the only language which can take the place of Hindi at present, and which is also being used largely in the administration in the Centre, is English. This resolution of Sri Seshadri says that English should be the official language of the Union and not the associate language, as it is now. Before that we were talking about the bi-lingual status for English, that is, English and Hindi will be the languages of the Union. But that cannot hold water now at all on account of the intolerance of the Hindi-speaking people and the Hindi *zealots*. For these reasons, the feeling in the non-Hindi States has become much stronger than before: especially among the student population, it is very much stronger. If we take all these circumstances into consideration, it is not possible to support Hindi as the official language of the Union. No longer is it possible. It will not be accepted nor will it be right, ignoring the feeling in the non-Hindi States, to say that Hindi shall be the official language of the Union and English shall be the associate language for many many years to come. I think this is the position that the Congress wants to take at present. The Congress leaders have expressed their opinion that way. But that is not possible. I also supported this once in this House some time ago. But that is not possible now. Two things have happened now. One is the fanaticism of the Hindi-speaking Members of Parliament and the other is their intolerance even to speak in English. Even on the telephone, they do not speak in English. I went there, and nobody would speak to me in English. The Minister or the Deputy Minister or the Clerk or the Chaprasi will not speak in English. They will say, 'Kya hai'. If any of us should speak in English, he would not reply in English. He would talk in Hindi. That is the kind of intolerance. They need not go to that extent in order to support Hindi being continued as the Union official language. They should be moderate and tactful. They could tactfully manage our people

4-40 p.m.

19th February 1968] [Thiru K. Balasubramanya Ayyar]

They can slowly convert us. But they do not do that. They are not anxious to convert our people. In a democracy, when people want Hindi to be the official lasguage of the Union, they should be more tolerant. They must ask people, "why not you accept this; let us do it in the name of India and in the name of the units of the country'. Instead of that they say. "If you talk in English, we would not answer in English; if you talk in your regional language, we will not care for it This should not be the attitude of people who support Hindi as the official language of the Union. It is on account of these things that people in the non-Hindi States have come to believe that there is something more than even the language question in the Hindi people's support for the official language being Hindi. That is the impression honestly entertained by many people. That is what I express here. Therefore, I entirely support the resolution moved by Thiru R. M. Seshadri that we should, instead of Hindi, have English as the official language of the Union.

THIRU A. R. DAMODARAN : Sir, there was perhaps a time in the history of our land when many people in our country would have thought that Hindi would be an acceptable official language of the country, but I think that time has died, and we have completely turned the corner. And I am afraid it has become very definitely established at least in the South Indian States and Orissa, Bengal and Nagaland, that Hindi can never be the sole official language of our country. The only question that arises is whether Hindi and English are to be the two official languages in India, and whether this compromise would ever work out in practice. A very respected leader of India, Dr. C. Rajagopalachari, has pointed out the dangers of accepting a bi-lingual formula in the Centre. As Mr. Balasubramanya Ayyar mentioned, we are not going to discuss now the possibility of whether the fourteen languages of our land will become in course of time the national languages of our country and whether twenty years hence, another ten or fifteen languages may not spring up from other communities, which are minorities now, and may not demand equal status. But the position as at present demands that we should have a very clear and definite view as to what is the language that should remain as the official language of our land. Listening to the speeches that are made in Parliament even a few days ago by extremists of the Hindi speaking States, even moderate and cold-blooded persons like me feel like marching on to the battle field. I am not mentioning this to say that we are fighting for separatism or for a separate nation, though some Members of Parliament belonging to the Hindi speaking region seem very anxious to exploit the situation so that they can force the Central Government—a very mistaken notion if it still exists among them—to take some action against the Madras Government for an alleged contravention of the Constitution. This extremist opinion is fairly widespread in the Hindi speaking areas of the North and those of us who have had occasion to visit Delhi often in the past few years have come to experience this in a very vigorous way "I stayed, Sir, a few months ago in the Ashoka

Hotel and when I left it, after four days stay, a bill was presented to me completely in Hindi. When I asked the man in charge why a public hotel catering to an international tourist traffic should present this bill in Hindi. He said 'These are the instructions that we have received from the Government, Sir'. The impossible extremes to which the Hindi-speaking fanatics have gone have spoiled their case not only amongst the modest section of our nation in our State, but I think they have completely changed the opinion in the Southern States of India. (Thiru K. Balasubramanya Ayyar: Even the Air hostesses have been compelled to speak in Hindi and pass a viva voce examination). In every sphere of activity, and in every sphere of Government administration, there is a very vigorous bureaucracy at work. I would not only blame the fanatical Ministers of the Central Government—there are a few I realise—but even more so we have to realise that even in the Indian Administrative Service—the Central Service—there are many officers in the Education and Home Departments who have taken it upon themselves as a very patriotic duty to somehow insidiously bring in Hindi in various activities and in their correspondence with the State Government. I feel that we should take a very definite stand as has been embodied in Mr. Seshadri's resolution. I feel it is highly acceptable to the people of the State. We need not think in terms of conflict with the other formula that has been suggested of all the fourteen languages being accepted as the official languages of the Union. Our only plea here is that we have grave doubts whether that may be administratively possible. It has to be worked out. But until that is done, we should definitely declare that as far as the official language of the Centre is concerned, it shall and will remain English.

Sir, I might refer to the fact that when our Constitution was adumbrated, it was not contemplated that the Centre would assume the wide powers that it has assumed during the past seventeen or eighteen years. The powerful personality of Pandit Jawaharlal Nehru had a great deal to do with the gradual withdrawal of powers from the States. Because of his great prestige, because of the confidence that the people had in him, and because of the trust reposed in him, we associated the Central Government with the personality of Pandit Jawaharlal Nehru, and many of us were willing to forgo many of the powers that were vested in the States and handed them over to the Centre. We no longer have that all-India leadership and a leader of the personality of Jawaharlal Nehru and I do not think we can anticipate any such leadership in the future also. The leadership today has been graphically described as the leadership of the Hindi extremist block in the North and even so sane and moderate a person as the present Prime Minister has not been able to withstand the pressure of these linguistic fanatics with the result that we had a thoroughly unnecessary resolution tacked on to the Official Language (Amendment) Bill. I am, therefore fully in

4-50 p.m.

support of the resolution which my hon. Friend has brought before this House and I commend it for the acceptance of the House.

திரு. டி. கே. சுப்பையா : தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தில் "விரும்பாத பகுதிகளில் இந்தியைத் திணிப்பது, நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும் முன்னேற்றத்திற்கும் மிகுந்த ஊறு விளைவிக்கும்" என்ற கருத்தை மேற்கொண்டிருக்கிறபொழுது, அதைப் போன்றுதான் எந்தக் கொள்கையை எந்த மாநிலத்தவர் புகுத்தினாலும் அதுவும் இந்த நாட்டின் ஒருமைப்பாட்டைக் கெடுக்க வல்லது என்பது நாம் அறிந்த உண்மை. இதையெல்லாம் கருதித்தான் நாட்டின் பிரதமரும் மற்ற மாநில முதலமைச்சர்களும் கலந்து பேசி இந்த நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு பாதகம் இல்லாமல் அதை வளர்ப்பதற்கு மொழி பிரச்னையில் நல்லதொரு தீர்வு காணவேண்டுமென்று பிரயத்தனம் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் இதுபோன்ற தீர்மானம் ஒரு மாநிலம் மற்ற மாநிலங்களை ஆதிக்கம் செலுத்தும் வகையில் போடுவதால், முதலமைச்சரும் ஏனைய கட்சித் தலைவர்களும் பேசுவதற்கு ஊறு விளைவிப்பதாக அமையும். ஒவ்வொரு மாநிலமும் ஒவ்வொரு முடிவுக்கு வந்து தீர்மானத்தைக் கொடுத்துவிட்டால், நாளைக்கு முதலமைச்சருக்குக் கூட இதுபற்றி கலந்து பேசுவதில் சங்கடங்கள் ஏற்படலாம். தர்ம சங்கடமாகப் போய் விடும். அதனால் சமரசம் ஏற்படாமல் போகலாம். ஆகையால் இந்தத் தீர்மானத்தை வலியுறுத்துவது நல்லதல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மொழிப் பிரச்னையில் அனைவரும் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வரும்வரையில், இந்த சபையில் இதுபோன்ற தீர்மானம் வருவது நல்லதல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, ஏதோ ஆங்கிலம் தெரிந்தவர்கள்தான் அதிகமாக இந்த நாட்டில் இருப்பதாகவும் அதனால் ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்றும் சொல்லும் வாதம் அவ்வளவு நல்லதல்ல. ஆங்கிலம் ஒரு தேசத்தின் மொழி. வெள்ளையர்கள் 150 ஆண்டுகள் இங்கே ஆட்சி செலுத்தியதால் அவர்கள் மொழியை இங்கே வளர்த்தார்கள். அதைப் போன்று நாம் இப்போது நமக்கு நிர்வாகத்திற்கு ஏற்ற மொழி எது என்று நிர்ணயம் செய்ய வேண்டும். இந்த நாட்டில் ஆங்கிலத்தை விட தமிழ் தெரிந்தவர்கள்தான் அதிகம். ஆங்கிலம்தான் வேண்டுமென்ற முடிவுக்கு வந்தால், நிலைமை விபரீதமாகும். தேசத்தின் ஒருமைப்பாட்டை முகமில் பார்க்கவேண்டும். சிலர் இந்தி இல்லாமல் ஆங்கிலமே இருந்தால் சர்ச்சை இருக்காது என்கிறார்கள். இந்த தேசத்திற்கு வெள்ளைக்காரர் வந்தால் நல்லது என்ற மனப்பான்மை உள்ளவர்கள்தான் அப்படிப் பேசுகிறார்கள். ஒருமைப்பாட்டிற்கு குந்தகம் இல்லாத வகையில் ஆலோசனை நடத்த வேண்டும். அதை மனதில் கொண்டு நல்லதொரு முடிவு காண சந்தர்ப்பம் அளித்து இதுபோன்ற தீர்மானங்களை வலியுறுத்தாமல் இருந்தால், நல்லதென்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சாம்பசிவ செட்டியார் : தலைவர் அவர்களே, ஆங்கிலமே தொடர்பு மொழி என்று நாம் வற்புறுத்துவது நம்முடைய சுயநலத்தை யாதைக்கு அவ்வளவு பொருத்தமானது என்று என்னைப்

[திரு. ஏ. சாம்பசிவ செட்டியார்] [19th February 1968

பொருத்த வரையில் கருத முடியவில்லை. நம்முடைய தமிழ்மொழி தொடர்பு மொழியாக இருக்கலாம். மத்தியில் இருப்பவர்கள் கடிதங்களை தமிழில்தான் அனுப்ப வேண்டும், நாமும் தமிழில்தான் அனுப்புகிறோம் என்று சொல்லலாம். அதில் கண்டிப்பாகவும் இருக்கலாம். இரண்டாயிரம் கோடி ரூபாய் செலவழிக்கும் ஒரு பெரிய அரசாங்கம் பதினைந்து மொழிகளுக்கு மொழி பெயர்ப்பாளர்களை அமைத்து அவர்கள் அனுப்புவதையும் நாம் அனுப்புவதையும் மொழிபெயர்க்க வசதி செய்வது பிரமாதமான காரியமல்ல. அதை விட்டு விட்டு வேற்று நாட்டு மொழியை நம்முடைய ஆட்சி மொழியாகக் கொள்வது நல்லதல்ல. நமக்குள்ளே உள்ள கருத்து வேறுபாடுகளுக்காகவும், வடக்கே உள்ளவர்கள் பிடிவாதமாக முரண்பிடிக்கிறார்கள் என்பதற்காகவும் அந்திய மொழிக்கு ஆதரவு கொடுப்பது தேசப்பற்றுள்ளவர்கள் மனதைப் புண்படுத்துவதாக இருக்கும். இதைக்கொண்டு காங்கிரஸ்காரர்கள் இந்தி வேண்டுமென்று சொல்வதாகக் கொள்ளக்கூடாது.

எல்லோரும் என்ன முடிவு எடுக்கிறார்களோ அதைச் செய்வோம். அதற்காக கீழ் மன்றத்தில் போட்ட தீர்மானத்தில் ஒரு குழு அமைப்பது என்று கடைசியில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் குழு என்ன முடிவு கூறுகிறார்கள் என்பது வரை பொறுத்துக் கொள்ளலாம். நேற்று கூட மைசூர், ஆந்திரா மாகாண முதலமைச்சர்கள் கூட இது பற்றி முடிவு எடுக்க வேண்டும்; மத்திய அரசாங்கம் கொண்டுவந்த தீர்மானத்தைத் திரும்ப பெறவேண்டுமென்று வற்புறுத்த வேண்டும் என்ற முடிவிற்கு வந்திருக்கிறார்கள். அதனால் மேற்கொண்டு பரபரப்பு இல்லாமல் அமைதியாக இருந்து என்ன முடிவிற்கு வருகிறார்கள் என்பதை கவனிப்பது நல்லது. ஆங்கிலத்தையே மீண்டும் வற்புறுத்திக் கூறுவது நமது சுய மரியாதைக்கு இழுக்கு என்று வருத்தத்தோடு தெரிவித்துக்கொண்டு அதை யாரும் வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. கே. ராஜாராம்** : தலைவர்களே, மாண்புமிக்க அங்கத்தினர் சேஷாத்திரி கொண்டு வந்திருக்கும் இந்தத் தீர்மானம் வடக்கே சேத் தோந்தாஸ் இந்திதான் இருக்க வேண்டும், உடனே ஆங்கிலத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்று சொல்வதைப் போல நாமும் அதையும் தமிழ் நாட்டிலிருந்து அதே பாணியில் ஒரு தீர்மானம் போடுகிற மாதிரி இருக்கக் கூடாது. ஆனால் இந்தத் தீர்மானம் அப்படித்தான் இருக்கிறது. ஏனென்றால் இப்போது சட்டப்பூர்வமாக இருக்கும் நிலைமையை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். எதோ வெகுகாலம் அடிமைப்பட்டு கிடந்த நாடு இது. இந்த நாடு மிகவும் பிரமப்பட்டு அன்னிய நாட்டின் அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரம் அடைந்தது மட்டுமில்லாமல், சுதந்திரம் அடைந்த பிறகு இப்போதிருக்கிற மாதிரி அப்போது இந்த நாடில்லை. இந்த ஒரு தேசத்தில் 600 சமஸ்தானங்கள் இருந்தன. துண்டு துண்டாக இருந்த இந்த தேசம் ஒன்றாக இப்போது ஆக்கப்பட்டிருக்கிறது. 1950-ம் வருடத்தில் மொழிவாரி கான்ஸ்டிடுவன்ட் அசெம்பிளியில் விவாதத்திற்கு வந்தபோது இந்தி தான் இந்த நாட்டின் ஆட்சி மொழியாக

19th February 1968] [திரு. கே. ராஜாராம்]

இருக்க வேண்டுமென்று விவாதம் செய்யப்பட்டது. அப்போது ஆங்கிலம் தான் இருந்து கொண்டிருக்கிறது. இதை ஏன் மாற்ற வேண்டுமென்ற பிரச்னை எழுந்தது. அப்போது அந்த நேரத்தில் 15 வருடங்கள் வரை ஆங்கிலம் இருக்க வேண்டும். அதற்கு மேல் இந்தி ஆட்சி மொழியாக வைத்துக் கொள்ள வேண்டுமென்ற பிரச்னை தீராத பிரச்னையாக வந்தது. இந்தி இந்த நாட்டின் ஆட்சி மொழியாக இருப்பது என்பதை எல்லோரும் ஒத்துக் கொண்டு வந்தார்கள். ஆனால் 15 வருடங்கள் வரைக்கும் ஆங்கிலம் இருக்கவேண்டுமென்பதில் தகராறு வந்தது. அது தான் ஓட்டிற்கு விடப்பட்டது. ஒரு ஓட்டில் இருக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்த ராஜன் பாபு இது எற்கனவே முடிவு செய்திருந்தபடி 15 வருடங்கள் என்று ஒத்துக்கொண்டு விட்டதால் 15 வருடங்கள் வரை ஆங்கிலம் இருந்து வர வேண்டும். அதற்குப் பிறகு இந்தி வரட்டுமென்று முடிவு செய்தார்கள். இல்லாவிட்டால் இந்தி அன்றே வந்திருக்கும். இதையறியாத பலரும் பலவிதமாக பேசி ஒரு ஓட்டு போட்டதால் தான் இந்தி வந்தது என்று பேசி வருகிறார்கள். அந்த ஒரு ஓட்டு 15 வருடங்களுக்கு வரக்கூடாது என்று நிறுத்தி வைத்தது. 15 வருடங்களுக்குப் பின்னால் வர வேண்டுமென்று முடிவு செய்தது அந்த ஒரு ஓட்டு. 5-00 p.m

*THIRU A. R. DAMODARAN : Sir, the hon. the Leader of the Opposition has said that everybody has accepted Hindi as the official language and that the only question that was decided by one vote was the question whether English should continue after fifteen years. I would like to quote what Dr. B. R. Ambedkar has written—

"There was no Article which proved more controversial than Article 115 which deals with the Hindi question. No Article produced more opposition, no Article more heat. After prolonged discussion, when the question was put to vote, the result was 77 for, and against 77. The tie could not be resolved. After a long time, when the question was put to the meeting once more, the result was 77 against and 78 for Hindi. Hindi won its place as an official language by one vote."

The question was not only of English continuing for fifteen years and afterwards being discarded. It is the entire question which was considered by the Congress Party.

* திரு. கே. ராஜாராம் : எனக்கு கான்ஸ்டிடுவன்ட் அசெம்பிளி அங்கத்தினராக இருந்தவர்களிடம் நேற்று இது பற்றி விவாதம் செய்த நேரத்தில் சொன்னார்கள். சம்பந்தப்பட்ட ரிகார்டுகளைப் பார்க்கவேண்டும். அது எந்த க்ளாஸ் என்று தெரியவில்லை. 77, 78 என்று சொன்னார்களே தவிர 78 ஓட்டுகளில் பாஸ் பண்ணியது எது என்று அந்த புரோசீடிங்ஸை எடுத்துப் பார்த்தால் தெரியும். ஆகவே எப்படியிருந்தாலும் கூட நண்பர் தாமோதரம் அவர்களுக்குச் சொல்கிறேன். 15 ஆண்டுகள் ஆங்கிலம் தொடர்ந்து இருந்து வரும் என்று முடிவு செய்து விட்டார்கள், அதில் சந்தேகமில்லை. அப்படியிருக்கும்போது 1965ஓடு 15 ஆண்டுகள் முடிந்தவுடன் இந்தியை பலமாக புகுத்த எற்பாடு

[திரு. கே. ராஜாராம்] [19th February 1968

செய்த போது கிளர்ச்சி நமது மாநிலத்திலும் மற்ற இடங்களிலும் ஏற்பட்டது. அதன் பேரில் நேருவின் வாக்குறுதியை நிறை வேற்றுவது என்று ஒரு சட்டத்தை நிறைவேற்றினார்கள். ஆனால் அதில் " May or shall " என்ற தொந்தரவு வந்தது. அத்தோடு கௌஹாத்தியில் நடந்த காங்கிரஸில் இப்போது தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராக இருக்கும் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் எப்போதும் இங்கிலீஸ் இருந்துதான் ஆக வேண்டும், இந்தி மட்டும் ஆட்சி மொழி என்பதை நாங்கள் ஒப்புக் கொள்ள மாட்டோம் என்று பேசினார்கள். நான் கூட அங்கு உட் கார்ந்திருந்தேன். இப்போது உதவி பிரதம மந்திரியாக இருக்கும் மொரார்ஜி தேசாய் அவர்கள் " How long என்று கேட் டார்கள். எவ்வளவு காலத்திற்கு என்று கேட்டார்கள். அதற்கு சி. சுப்ரமணியம் சொன்னார் as long as non-Hindi State's do not want it, English should be there , என்று பதில் சொன்னர். அது தான் இன்று காங்கிரசினுடைய முடிவு. தமிழ் நாட்டு காங்கிரசின் முடிவான கொள்கை. இந்த நிலைமையில் தான் இப்போது அதற்கு உதவியாக இருக்க வேண்டுமென்றும் நமக்கு இங்கிலீஷ் தொடர்ந்து இருக்க வேண்டுமென்றும் சட்டம் வேண்டுமென்று வற்புறுத்தினோம். அந்தச் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றும்போது அம்மனைக் கொடுத்துவிட்டு இருமனை வாங்கிக் கொண்டதுபோல் சட்டம் நிறைவேறப் போகிறது என்று சந்தோஷத்துடன் இருந்த நேரத்தில், அந்தச் சட்டத்தை ஒரு வால் போன்ற தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றிவிட்டது. அதற்கு எப்படி யாவது பரிகாரம் செய்ய வேண்டிய நிலைமையில் எங்கள் தலைவர் காமராஜர் அவர்கள் முனைந்து பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். நமது முதலமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தில் ஒத்துழைத்து இந்த நாட்டின் ஒற்றுமையைக் காக்கவேண்டும். சுதந்திரம் அடைந்ததைக் காட்டிலும் அதை ஒன்றுக்கியது தான் பெரியது. 600 சிறுசிறு துண்டுகளாக இருந்த நாட்டை ஒரு நாடாக ஆக்கிய பெருமையைக் குலைத்து விடக்கூடாது என்பது. இதில் முத லமைச்சர் அவர்கள் பெரும்பங்கு எடுத்துக் கொள்வார்கள் என் பதில் சந்தேகமில்லை. நாம் தாமாலம் நிறைவேற்றி அதைக் கெடுத்துவிடக் கூடாது. அதன் மூலம் ஒட்டகக்கூத்தன் பாட்டிற்கு இரட்டை தாழ்ப்பாள் போட்ட மாதிரி வந்துவிடக்கூடாது. இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றினால் சேத் கோவிந்த தாசிற்கு பதில் சொல்வதாக இருக்கலாமே தவிர . . . . .

திரு. என். வி. நடராசன் : அதே சமயத்தில் உதைக்கும் கால் களுக்கு முத்தம் கொடுக்கும் நிலைமையில் இருக்கக்கூடாது.

திரு. கே. ராஜாராம் : மாண்புமிகு உறுப்பினர், சர்க்கார் கொறடா நடராசன் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். யார் காலையும் யாரும் முத்தம் கொடுக்கத் தேவையில்லை. நமது உரிமையை நாம் காப்போம். உழைப்பினால் காப்போம். இதற்கு பிறர் தயவு வேண்டியதில்லை. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை, நமது பண்பாடு அலாதி. இதில் அரசியலை புகுவிட்டுவிடக்கூடாது என்பது தான் காங்கிரசின் நோக்கம். எப்படியாவது எதிர்காலம்

19th February 1968] [திரு. கே. ராஜாராம்]

நமது சந்ததியாரின் எதிர்காலம் நன்கு இருக்கவேண்டுமென்பது முக்கியம். இன்றுள்ள மாணவர்களைப் பொறுத்தவரை, எல்லோரும் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கவில்லை. அதுபோல எல்லோரும் தவறாக நடக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. ஒரு சிலர் இருக்கலாம். அவர்களுக்கு நாம் நடந்து காட்டும் வழியில் தான் அவர்கள் போவார்கள். ஆகையால் இம்மாதிரி தீர்மானங்களை நிறைவேற்றி மேலும் நிலைமைகளை சீர்கேடு அடையவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏற்கனவே ஆங்கிலமும் இருக்கிறது. யாரும் அதை அகற்ற முடியாது. இந்தியைக் கொண்டு வந்து புகுத்தி ஆங்கிலத்தை எடுத்துவிட்டு இந்தி தான் இந்த நாட்டு மொழி என்று நிறைவேற்றினால், அதைத் தடுக்கக் கூடிய சக்தியும் இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் எங்களுக்கு விட்டுவிடுங்கள். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். நீங்கள் கஷ்டப்படவேண்டாம். இந்தி மொழி இன்று தனி ஆட்சி மொழிக்கு உகந்தது அல்ல. அவர்கள் சொல்வது நடக்கக் கூடிய காரியமும் அல்ல. ஆகையால் தான் எங்கள் தலைவர் காமராஜர் அவர்கள் பொதுக் கூட்டங்களில் கூட, இப்போது இந்த சமாதானத்தை முடித்துவிட்டுத்தான் வேறு சோலி பார்க்கவேண்டுமென்று பேசிக் கொண்டிருக்கிறார். நமது முதலமைச்சர் அவர்களின் ஒத்துழைப்பு அவர்களுக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. மற்ற மாநில முதலமைச்சர்களுடன் நமது முதலமைச்சர் அவர்களும் சேர்ந்து இந்த விஷயத்தை இந்தியாவின் "இண்டெக்ரிடி" ஒருமைப்பாடு இவைகளின் நன்மைக்காக நாம் பாடுபட வேண்டும். இந்தத் தீர்மானம் அவசியமில்லை, தேவையும் இல்லை. இந்தத் தீர்மானத்தின் மூலம் நன்மை ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தால் எதுவுமில்லை.

எனென்றால் ஆங்கிலம் ஏற்கனவே இருக்கிறது. ஆங்கிலம் மட்டும் தான் இருக்க வேண்டும் என்று சொல்லுவதைத் தவிர இதில் வேறுஒன்றும் இல்லை. அது ஒருமைப்பாட்டுக்கு உகந்த தல்ல. இது திரு. சேத் கோவிந்தாஸ் போன்றவர்களுக்கு பதிலடியாக இருக்கலாம். நாம் இன்றைக்கு இந்த மாதிரியான தீர்மானத்தை நிறைவேற்றலாம். ஆனால் நாளை பீகாரில், மத்தியப் பிரதேசத்தில், உத்திரப் பிரதேசத்தில் அல்லது வேறு ஒரு மகாணத்தில் உள்ள சட்ட சபை இந்திதான் இருக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். என்ன ஆகும்? சரிக்கு சரியாகிவிடும். எனவே இதில் அர்த்தம் இல்லை. ஹைலெவல் கமிட்டி-உயர்மட்டக் கமிட்டி போட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் மொழித் தீர்மானத்தில் நிறைவேற்றி இருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்திலேயே அந்தப் பகுதிதான் உயிர். எங்கள் கட்சியைப் பொறுத்த வரையில் அந்தப் பகுதிதான் அசெம்ளியில் நிறைவேற்றி இருக்கின்ற தீர்மானத்தின் உயிர்நிலை. அதை நிறைவேற்றி விட்டு அதற்குக் குந்தகமாக இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதில் அர்த்தமில்லை. எனவே உண்மையில் அதற்குக் குந்தகம்தான் இது விளை விக்கும் என்று அஞ்சுகிறேன். ஆகவே இதை வற்புறுத்த வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். எம். சேஷாத்திரி அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். 5-10 p.m.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேஷாத்திரி அவர்கள் இங்கே கொண்டுவந்திருக்கிற தீர்மானத்தினுடைய கருத்தினை அவர்கள் விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள் அதாவது ஆங்கிலமே தொடர்ந்து இந்தியாவினுடைய ஆட்சிமொழியாகவும் தொடர்பு மொழியாகவும் இருக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசினுடைய மொழிக் கொள்கையைப் பொறுத்த வரையிலும் என்ன என்பதைத் தெரிவிக்கிற வகையில் அண்மையில் நிறைவேற்றிய மொழித் தீர்மானம் ஓரளவுக்கு ஆர். எம். சேஷாத்திரி அவர்களுடைய நோக்கத்தை நிறைவேற்றுகிற வகையில் இருக்கிறது. ஆகவே திட்டவட்டமாக தெளிவாகக் கொண்டுவருவதன் மூலம் கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல், நாம் நம்மை பாதுகாத்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இப்போது இருக்கிற சூழ்நிலையில் தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமிழே நமக்கு பயன்படுகிற மொழியாக இருக்க வேண்டும். தமிழகம் அல்லாத பிற மாநிலங்களோடு, உலகத்தோடு தொடர்பு கொள்ள ஆங்கிலம் இருக்க வேண்டும். அதற்கான எல்லா வழிவகைகளையும் வசதிகளையும் அரசியல் சட்ட அமைப்பின் அடிப்படையில் செய்தாக வேண்டும். அதைச் செய்து தர அத்தீர்மானத்திலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருப்பதைப் போல் மேல் மட்டத்தில் இருப்பவர்கள் கூடிக் கலந்து ஒரு முடிவு எடுப்பதாக இருந்தாலும் எடுக்க வேண்டும் என்ற கருத்து ஏற்கனவே வலியுறுத்திச் சொல்லப்பட்டு இருக்கிறது. அந்த தீர்மானத்தில் நாம் சொல்லியிருப்பது :

Tamil and other national languages should be adopted as the official languages of the Union and the Constitution should be amended accordingly. Till such time as this is achieved, English alone should continue as the official language. This House urges that the relevant chapter of the Constitution on the official language shall be suitably amended.

என்று இந்த மாநில அரசின் கருத்தைத் தெரிவிக்கிற வகையில் போவைத் தீர்மானம் நிறைவெற்றப்பட்டு அது மத்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. ஆகவே 14 மொழிகளும் அங்கே இருக்க வேண்டும் என்று அத்தத் தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கிற அளவுக்கு எற்றிய இந்தியை அது வலிவு கொண்டிருக்கிற வகையில் அதைக் கீழே கொண்டுவருவது எளிதா அல்லது மற்ற 13 மொழிகளையும் கொண்டுபோய் அதன் பக்கத்திலே உட்காரவைப்பது எளிதா என்று பார்க்கிறபோது அதைக் கீழே இழுப்பதை விட இந்தியின் பக்கத்திலே மற்ற மொழிகளைக் கொண்டு போய் உட்கார வைத்து இந்திக்குத் தருகிற சலுகைகள், வாய்ப்புகள். வசதிகள் அந்தனையும் இதற்கும் தர வேண்டும் என்கிறோம். அந்த நிலை வருமா. இயலுமா என்பதை இந்தத் தலைமுறையினர் முடிந்த அளவு யோசித்து யோசித்துப் பார்ப்போம். முடிந்த அளவுக்கு அதற்கான வழிவகை செய்து பார்ப்போம். அதற்கு அடுத்த

தலைமுறையினரும் யோசித்துப் பார்க்கலாம். அதற்குப் பிறகும் ஆங்கிலம் என்றென்றும் இருக்கட்டும், அதன் பணியை ஆங்கிலம் தொடர்ந்து செய்து கொண்டே வரட்டும் என்றால், பிறகு அதைப் பற்றி பார்ப்போம். இப்போது 100-க்கு 90 பங்கு வேலையை ஆங்கிலம் செய்கிறது. நம் தமிழ்மொழி 10 பங்குதான் செய்கிறது. நாளைக்கு 20 பங்கு தமிழும் 80 பங்கு ஆங்கிலமும் என்ற நிலை வரலாம். நம் பிள்ளைகள் காலத்தில் 50 பங்கு ஆங்கிலம் 50 பங்கு தமிழ் என்று வரலாம். நம் பேரப் பிள்ளைகள் காலத்தில் 80 பங்கு நம் தமிழ் 20 பங்கு ஆங்கிலம் என்று செய்கிற காலம் வரும். ஆகையால் 14 மொழிகளும் ஆட்சியில் இருக்க இயலுமா என்று கேட்டால், இப்போது நான் இதைத் தான் சொல்ல விரும்புகிறேன். ஒரு ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துப் பார்த்தால் அதில் 14 மொழிகளும் ஆண்டு கொண்டிருக்கின்றன. 5 ரூபாய் நோட்டில் 10 ரூபாய் நோட்டில் இன்னும் 2 ரூபாய் நோட்டில் எல்லாம் 14 மொழிகளும் ஆள்கின்றன. ஆகவே 14 மொழிகளும் ஆட்சி பீடத்தில் ஏற்ற முடியுமா என்றால், இப்படிப் பட்ட வகையில், மக்களின் உணர்ச்சியைத் தொடக்கூடிய வகையில், மக்களின் கண்ணில் படுகிற, காதில் விழுகிற, இதயத்தைத் தடவுகிற, இதயத்தின் நாடிகளைத் தடவுகிற அந்தப் பணிகளை அவர்களுடைய தாய்மொழியில் காணுகிற அளவுக்கு அது மத்திய அரசாலும், மாநில அரசாலும் நடைபெறுகிற அளவுக்காகி, மாற்றப்பட முடியாத இடங்களில் ஆங்கிலமே இருந்து பணியாற்றச் செய்யலாம். A + B என்பதைப் பற்றி சாதாரண மக்களுக்கு அன்றாட பழக்கத்திற்கு தேவையில்லாத வைகள் ஆங்கிலத்தில் இருப்பதைப் பற்றி கவலைக்கொள்ளத் தேவை யில்லை. ஆனால் குடியரசு நாள் கொண்டாடப்படுகிறது; குடியரசுத் தலைவர் பேசுகிறார் என்றால், இந்த நாட்டைச் சார்ந்த அத்தனை மொழியிலும் பேசி அவர்கள் காதில் அது விழுந்தால் அது அவர் களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். அரசாங்க சார்பில் கொண்டாடு கிற விழாக்கள் அந்தந்த மொழியிலேதான் நடக்கும். சட்டமன்ற விவாதங்கள் அந்தந்த மொழியிலேயேதான் இருக்கும் என்று தான் கோருகிறோம். அதேபோல் மத்திய அரசைச் சேர்ந்த விவகாரங்களில் 14 மொழிகளுக்கும் பங்கு இருக்க வேண்டும். ரூபாய் நோட்டில் எப்படி 14 மொழிகளும் ஆண்டு கொண்டிருக் கின்றனவோ, அதைப் பார்க்கிற மக்கள் தங்கள் மொழி ஆள்கிறது என்ற திருப்தி கொள்கிறார்களோ, அதைப் போல் மற்ற விஷயங் களிலும் இருக்க வேண்டும். உதாரணமாக டெல்லியில் மத்திய சர்க்காரின் அக்ரிகல்சுரல் டிபார்ட்மெண்டு என்று சொன்னால், அதை 'கிருஷிக் பவன்' என்று இந்தியில் போட்டிருப்பதைப் போல் தமிழிலும் வேளாண்மைத் துறை என்று போட வேண்டும். இப்படிப் பொதுக் கட்டிடங்களில் 14 மொழிகளும் இடம் பெறுவதில் கஷ்டம் இல்லை. செரிமோனியல் அபீஷியல் லாங்கு வேஜஸ் என்று நம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அதைப் போல் செரிமோனியல் அபீஷியல் லாங்குவேஜஸ் என்ற அளவுக்கு இவைகள் எல்லாம் முதலில் கடைபிடிக்கப்பட்டு வருகிற காலம் எதிர்காலத்தில் வரும். அது வரும் வரையில் ஆங்கிலத்தைக் கையாளுங்கள். பிறகு எதிர்காலத்தில் அவர்கள்

5-20 p.m.

[திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்] [19th February 1968

பார்த்துக் கொள்வார்கள் என்றுதான் தீர்மானத்தை நிறை வேற்றி இருக்கிறோம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் சேஷாத்திரி அவர்களின் நோக்கம் இத் தீர்மானத்தின் மூலம் நிறைவேற்றப்படுகிற அளவுக்கு இருப்பதால், திட்டவட்டமாக இதுதான் என்ற நிலைமையில் கொண்டுவந்து நிறுத்திவிடாமல் இருக்க வேண்டும். நிறைவேற்றப்பட்டு இருக்கிற தீர்மானத்தில் பாட திட்டத்தைப் பொறுத்த வரையில், இந்த மாநிலத்தில் எப்படி இருக்க வேண்டும் என்று சொல்லி, மத்திய ஆட்சியிலும் 14 மொழிகளும் இருக்கட்டும், அவைகள் அந்த இடத்தைப் பெறுகிற வரை ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கட்டும், அதற்கு மேலும் இருக்க உயர்மட்ட குழு ஆலோசிக்க வேண்டும் என்று எல்லா வகையிலும் இடம் அளிக்கின்ற முறையில் இருப்பதால், கனம் அங்கத்தினரின் நோக்கம் இத் தீர்மானத்திலும் நிறை வேற்றப்படுகிறது. நமக்கு இருப்பது ஆங்கிலமும் தமிழும் இருக்கட்டும் என்று கருதுகிறோம். மற்றவர்களுக்கு அவர் களுடைய மொழியும் ஆங்கிலத்தை விரும்பினாலும் விரும்பா விட்டாலும் ஒரு சொலுஷன் கண்டுபிடிக்கிற வரை இருக்கட்டும் என்று நாம் தீர்மானத்தை நிறைவேற்றி இருப்பதால், இது உறுப்பினர் அவர்களைத் திருப்தி செய்யும் என்று கருதுகிறேன். 14 மொழிகளும் ஆளுகிற நிலை ஏற்படுகிற வரையிலும் ஆங்கிலம் இருக்கட்டும் என்று சொல்லி இருக்கிறோம். அந்த நிலைமை ஏற்பட்டுவிட்டால் அதற்குப் பிறகும் ஆங்கிலம்தான் இருக்க வேண்டும் என்று யாரும் வற்புறுத்தமாட்டார்கள். அந்த நிலைமை உறுப்பினர் சேஷாத்திரி அவர்களுக்குக் கூட வராது என்று நினைக்கிறேன். ஆங்கிலம்தான் வேண்டும் என்று அப்போதும் அவர் கேட்கமாட்டார். எனவே அவர்கள் வாதத்தை நிறை வேற்றுகிற அளவுக்கு இங்கே நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இருப்பதால், இந்தத் தீர்மானத்தை வலியுறுத்த வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

* THIRU R. M. SESHADRI : May I say just one or two words in clarification of my Resolution, Sir ? I am grateful to the hon. Members for giving me the benefit of their very valuable advice so frankly and so openly. But it is my misfortune that I am not able to agree with many of the views expressed here by my very good friends. One thing I am rather happy about is that the hon. Member Thiru Rajaram does not happen to be a member of the Bar because I do not think I would have any place to practice in the Bar if the hon. Member Thiru Rajaram also assumes the role of a lawyer. The capacity of the hon. Member Thiru Rajaram to pettifog on the clearest possible language of Dr. Ambedkar where he says that Hindi gained this place as the official language by one vote is great. What is the equivocation about this sentence of Dr. Ambedkar? What is the ambiguity in it to make the hon. Member Thiru Rajaram say that history does not support the version which I gave? I do not understand it.

Then, two or three very important points were made. One of them was that this Resolution perhaps smelt a little of deficiency in patriotism. I am sorry that anybody should take this view.

19th February 1968] [Thiru R. M. Seshadri]

I was careful enough to explain even at the very beginning that I did not ask for the enthronement of Tamil as the all-India language. I have said, "Let me not be accused of *patchapatham* or bias or prejudice in favour of Tamil." If my Resolution had pulled down Hindi and installed Tamil in its place in the way the Hindi people have done, it will be a tit for tat. But what I have said is, "Pull her down and put a neutral person as Queen." Therefore, there is no reason for anybody suggesting that I am playing the game of tit for tat and that I am trying to cause disruption to the unity of the country. It is not so. The entire disruption has come from the other side. For example, we have been advisecd by the hon. the Leader of the Opposition to-day that a Resolution should aim at preserving and promoting the harmony and unity of the country. But, then, if we go into history, we painfully remember that only a few months ago the Lok Sabha passed a resolution. And what is the unity of the country which has been achieved? What the damage done to the sacred principle now laid down by the Leader of the Opposition is, is a matter for record in history, a record in which young boys and girls have shed their blood in the streets in every city of India. In the circumstances, we do not require any advice as to the weight of the Resolution, of the responsibility attached to it. Now, he says also, "A convention is to be held. Let us not forestall the conclusion of the convention." But my submission is this. Are we going to sit here and say, "The convention is coming. Let us not express any views."? We are free to express our views. The convention can take the benefit of our views here. After all, the convention coming is not a bugbear or a nightmare. We may offer our views here and the convention will hear them.

I am finishing by saying that I take a very rigid, objective and detached view on this matter. It does not matter whether Nagaland opposes or supports it or Mysore opposes or supports it. I am not talking about the practical feasibility of this matter. If Hindi is accepted by 99.9 per cent of the population, still I would say, morally and on principles of equity Hindi has no rightful place to the queen of the country. It is only a regional language in the same manner as Tamil is. The issues are simple. Can a regional language take the place of the all-India language? Now, if it is said, "why not?", then, why not other regional languages?

Secondly, on the question of feasibility, great light was thrown by my respected senior, Thiru Balasubramanya Ayyar. On the question of feasibility let us remember this. Apart from the fact that Hindi became the official language only by the casting vote of the President of the Constituent Assembly, this signal fact remains. The changed set-up of the country to-day, the physical structure of the states in the country demands a revision of this decision. We to-day have got linguistic States. Our Constitution fathers did not foresee this change. The changed set-up, the historical situation, the structure of our states in the country

compels as to reconsider this question. I want this to be considered. What has time and experience taught us? It has taught us that there is gravest perl to the unity of the contryu in the present position It has taught us that blood flows t day in the country. Therefore, Hindi should be withdrawn. If they are going to ask me to withdraw Tamil, I say, "No need. Tamil is not the Queen of the whle land. You withdraw Hindi. Let English come there."

I am now concluding by making oue observation. It has become a fashionable criticism to say that English is a foreign language and that we should not have English. Pope spoke Tamil as well as Novelar speaks Tamil. It may be that the foreigner speaks English. But when the tongue is the same, English is as much my own as it belongs to the Englishman. The tongue may be the Englishman's tongue, but the language spoken is English and that is the language which I speak. With regard to language, there is no question of proprietary right. Nobody can say, "It is mine." In that case, we cannot have pope installed in our Tamil culture and Tamil literature. It is not a foreign tongue. It is my tongue today. It may be an Indian's tongue, but it is my tongue. As a matter of fact, I am saying that it is not foreign to India. It may have come with the foreigners. The dress I am wearing is a foreign type or mode of dress. That does not mean that I should discard it. Many things can be and should be assimilated, in our culture. as a matter of practice. The physical and tangible fact is that English is not a foreign tongue. English is an Indian tongue. If you want to bring 14 languages, I will bring English as the fifteenth official language.

5-30 p.m. But, noting the flurried movements on the opposite side after the Resolution was discussed, I do not think I have the temerity to press the resolution to an issue. I am however grateful that there is a certain amount of common area of agreement between for the opportunity given and for the very valuable advice that the Government Benches and the Opposition side. I am grateful hon. Members have given and I have pleasure in withdrawing the Resolution.

The Resolution was, by leave, withdrawn.

(3) PENSION TO TEACHERS

* THIRU G. KRISHNAMOORTHY: Mr. Chairman, Sir, I move—

"That this House recommends to the Government that teachers of all grades under the service of head bodies and Private Managements who retired prior to 1st April 1955 be granted pension."

THIRU A. R. DAMODARAM: Sir, I second it.